https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

23rd SEPTEMBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | MONDAY | ISSUE: 98



# ஜனாதிபதியானார் அநுர

02



# நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகும் ஜனாதிபதி

தேர்தல் மேடைகளில் கூறியதற்கு அமைவாக நாடாளுமன்றத்தைக் களைத்து நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்வது பற்றி ஆலோசித்து வருவதாக அறிய முடிகிறது. உடனே செல்வதா? அல்லது ஒரிரு மாதங்கள் கழித்து செல்வதா என்று பலருடனும் கலந்தாலோசித்துவிட்டு விரைவில் ஜனாதிபதி அறிவிப்பார் என்று தேசிய மக்கள் சக்தி வட்டாரம் தெரிவிக்கிறது.

புதுச்சுடர்
www.puthusudar.lk
2024 SEPTEMBER 23 - MONDAY

# தோழர் எதிர்நோக்கும் சவால்

தெற்காசியாவிலேயே முதல் முதலாக இடதுசாரி கட்சி ஒன்று இப்போது இலங்கையில் ஆட்சியைப் பிடித்திருக்கிறது. ஜனாதிபதியைத் தோழர் என்று அழைக்கும் வாய்ப்பு ஒன்று நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தோழர் அனுரகுமார திஸாநாயக்க இன்று முழு நாடும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதியாக வந்துள்ளார்.

ஒரு வார்த்தையேனும் இனவாதம் பேசாமல் பொருளாதாரக் கொள்கையை மாத்திரம் பேசி வெற்றிபெற்ற முதலாவது ஜனாதிபதி.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மக்களின் விருப்பத்துக்குரிய ஜனாதிபதியாக மாறியுள்ளார்.

அனுரவின் வெற்றியானது ஊழலை ஒழிப்பதற்கும் -பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கும் மக்களால் வழங்கப்பட்ட ஆணையாகும்.

2015 மைத்திரி - ரணில் அரசில் மக்கள் ஏமாற்றப்பட்டதுபோல் இந்த அரசிலும் அமைந்துவிடக்கூடாது என்பதே மக்களின் விருப்பம்.

மஹிந்தவின் ஊழலுக்கு எதிராகவே அந்த அரசு அமைந்தது.ஆனால்,நடந்தது என்ன...

அனைத்துத் திருடர்களும் நல்லவர்களாக்கப்பட்டனர். புதிதாக மத்திய வங்கியையும் கொள்ளையடித்துவிட்டுச் சென்றனர்.

நாட்டின் பொருளாதாரம் இந்தளவு மோசமான நிலைக்குச் செல்வதற்கு அந்தக் கொள்ளையே காரணம்.

அந்தக் கொள்ளையர்களை ரணில் பாதுகாத்த அழகோ தனி. இதன் காரணமாகத்தான் கோத்தா விரட்டப்பட்டதும் அந்த இடத்துக்கு ரணிலை நியமித்தது ராஜபக்ச கூட்டம்தான்.

அவர்தான் அந்தத் திருடர்களை பாதுகாப்பார் என்பதை சரியாகப் புரிந்துகொண்ட மஹிந்த ரணிலை ஜனாதிபதியாக்கினார்.

ரணில் வெகு சீக்கிரத்திலேயே அந்தப் பணியை செவ்வனே செய்து முடித்தார்.சில நாட்களிலேயே மொட்டு எம்பிக்கள் வெளியே வரத் தொடங்கினர்.

ரணில் அந்தத் திருடர்களை பாதுகாத்த விதம்தான் ரணிலை மக்கள் இந்தத் தேர்தலில் தோற்கடிப்பதற்கு காரணம்.

2020 தேர்தலிலும் இதே காரணத்துக்காகவே மக்கள் ரணிலைத் தோற்கடித்தனர். அதாவது ,2015 காலப்பகுதியில் ஊழலுக்குத் துணை போனமைக்காக.

ஆகவே, இந்தத் தேர்தலில் மக்களின் ஆணையானது ஊழலை ஒழிப்பதற்காகத்தான் என்பதை அனுர தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார்.

அந்தப் புரிதலுக்கு ஏற்ப செயற்படுவதில்தான் அனுரவின் உண்மையான வெற்றி தங்கியுள்ளது.

# அணுரவின் இடத்துக்கு நிபுணாராச்சி

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவானதால் அவரது எம்பி பதவி வெற்றிடத்துக்கு அதே காட்சியைச் சேர்ந்த லக்ஸ்மண் நிபுணாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அவர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு அடுத்த இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியானார்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெற்று முடிந்த 9 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

இன்று காலை 10 மணிக்கு அவர் ஜனாதிபதி செயலகத்தில் பதவி பிரமாணம் செய்துகொண்டார்.

அத்தோடு நாட்டு மக்களுக்கு உரையும் நிகழ்த்தினார்.

அனுர விருப்பு வாக்குகளுடன் சேர்த்து 57 லட்சம் வாக்குகளை பெற்றார்.அவரை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்த -இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்ட சஜித் பிரேமதாசா விருப்பு வாக்குகளுடன் சேர்த்து 45 லட்சம் வாக்குகளை பெற்றிருந்தார்.

12 லட்சம் மேலதிக வாக்குகளால் அனுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றார்.






SEPTEMBER 2024 INTAKE

UK Endorsed
Diploma Programs

- UK Diploma In Psychology and Counseling
- UK Diploma In Information Technology
- UK Diploma In Teacher Training
- UK Diploma In Business Management
- UK Diploma In Early Childhood Education
- UK Diploma In English

10% Discount for the First 100 Students

Recognitions

City & Guilds Approved Centre
bcs The Chartered Institute for IT
Skill Development Council Canada
BRITISH COUNCIL
IIC UNIVERSITY OF TECHNOLOGY
QUALIFI
Member of : FITIS

UK Qualified
HND Programs

- HND (UK) in Psychology and Counseling
- HND (UK) In Information Technology
- HND (UK) In Teacher Training
- HND (UK) In Business Management
- HND (UK) In English

TOP UP DEGREES

- Bachelor's of Education
- BA in English
- Bachelor's of Psychology
- Bachelor's of Business Admin (BBA)

IAU International Association of Universities
WHED World Higher Education Database
UGC RECOGNIZED
WES World Education Services APPROVED

+94773 208 023

AMAZON COLLEGE Where Success Begins
AMAZON COLLEGE & CAMPUS

294, 2nd Floor Galle Road, Colombo-4.
+94112591110 / +94114386126
info@amazoncollege.lk
www.amazoncollege.lk

WHERE SUCCESS BEGINS 15TH YEARS ANNIVERSARY

# கிரிக்கெட் போட்டி – வருடாந்த ஒன்றுகூடல்




சர்வதேச கல்விக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இலங்கையின் முன்னணி நிறுவனமான International Study Centre (ISC) கல்வி நிறுவனம் மாணவர்கள் மத்தியில் குழுச் செயற்பாடு மற்றும் அவர்களின் உடல் நலனை ஊக்குவிக்கும் வகையில் தற்போதைய மாணவர்கள், கலாநிதிகள், பீடத்தின் பணியாளர்கள் மற்றும் பழைய மாணவர்கள் பங்குபெற்றும் கிரிக்கெட் போட்டியை 2024 ஆகஸ்ட் 10ஆம் திகதி கிரிமண்டல மைதானத்தில் நடத்தியது.

உலகளாவிய ரீதியில் நன்மதிப்பைப் பெற்ற பல்கலைக்கழகங்களினால் அங்கீகரிக்கப்படும் கனடாவில் மிகவும் மதிப்பைப் பெற்ற தகுதியான ஒன்டோரியா செக்கன்டரி ஸ்கூல் டிப்ளோமாவைப் பயிலும் மாணவர்களுக்கு ISC கல்வி நிறுவனம் பட்டமளிப்பு விழாவை நடத்தியிருந்த நிலையில் இதன் தொடர்ச்சியாக இந்தக் கிரிக்கெட் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பெலாரூஸ் பட்டதாரிகள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வையும் தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் ஓகஸ்ட் 10ஆம் திகதி கோல்ஃபேஸ் ஹோட்டலில் ISC கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்தது.

# ஒக்டேவ்-கொழும்பு பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு மையமான ஒக்டேவ் (OCTAVE), 2024 ஆகஸ்ட் 15 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம், இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் புள்ளிவிபரவியல் துறையுடன் தனது ஒருங்கிணைப்பை அதிகாரப்பூர்வமாக முடிவு செய்துள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திரா மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் எச். டி. கருணாரத்ன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த வெற்றிகரமான ஒருங்கிணைவுடன் மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்துடனான ஒருங்கிணைவு, ஒக்டேவ் மற்றும் முன்னணி கல்வி நிறுவனங்களுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துகிறது.

இந்த ஒருங்கிணைவு மூலம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் தரவு பகுப்பாய்வு பாடத்தொகுப்பை மேம்படுத்த ஒக்டேவ் உதவும். தரவு அறிவியல் (Data Science), இயந்திர கற்றல் (Machine Learning) மற்றும் தரவு பொறியியல் (Data Engineering) போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்தப்படும்.

# விஞ்ஞான கற்கைகளை மேம்படுத்த இணை ஸ்தாபனம்




நாட்டின் சுகாதார பராமரிப்பு கல்வியை சர்வதேச நியமங்களுக்கு கொண்டு செல்லும் நோக்குடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்துடன் (SLIIT) இணைந்த கல்வி ஸ்தாபனத்தை நிறுவ ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி முன்வந்துள்ளது.

புத்தாக்கமான தாதியியல் மற்றும் இணைந்த சுகாதார பராமரிப்பு கல்வியை SLIIT-HEMAS Allied Health Sciences Institute (SHAHSI) எனும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பினூடாக பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

ஒக்டோபர் மாதத்தில் புதிதாக ஆட்சேர்ப்புக்கு முன்வந்துள்ள இந்த நிறுவனத்தில் 300க்கும் அதிகமான மாணவர்கள் இணைய முன்வந்துள்ளதுடன், மேலும் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர்.

தனியார் சுகாதார பராமரிப்பு வழங்கலில் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் கொண்டுள்ள ஆழமான அனுபவத்துடன், SLIIT இன் புகழ்பெற்ற தரமான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கான கீர்த்தி நாமத்துடன் அமைந்த இந்த பங்காண்மையினூடாக, சர்வதேச ரீதியில் தொழில்புரியக்கூடிய இணைந்த சுகாதார பராமரிப்பு நிபுணர்களுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான பரிபூரண கற்கைகளை வழங்குகின்றது.

நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் காணப்படும் திறன் படைத்த சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முக்கிய படியாக இந்த கைகோர்ப்பு அமைந்திருக்கும்.

தாதியர் மற்றும் சுகாதார பராமரிப்பு நிபுணர்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் பங்காண்மையினூடாக துரித கல்வி வழங்கப்படவுள்ளதுடன், முன்னணி விரிவுரையாளர்கள் மற்றும் நிபுணர்களை இணைத்து மாணவர்களுக்கு கல்வியறிவூட்டவும் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தினூடாக வழமையான கல்விசார் கைகோர்ப்புகளுக்கு அப்பால் சென்று, தனது பரிபூரண தொழிற்துறை வெளிப்படுத்தல் மற்றும் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும். தற்போதைய கற்கைகள், அவுஸ்திரேலியாவின் Deakin University மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் Liverpool John Moores University ஆகியவற்றுடன் இணைந்ததாக அமைந்திருக்கும். மேலும், தாதியியல் கற்கைகள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (வுஏருஊ) ஏேஞ நிலை 6 சான்றிதழை வழங்குவதாக அமைந்திருக்கும்.

இலங்கையின் சுகாதார பராமரிப்புத் துறையில் பெருமளவு புத்திஜீவிகளின் வெளியேற்றம் காரணமாக, அடுத்த தலைமுறை சுகாதார பராமரிப்பு நிபுணர்களை தயார்ப்படுத்துவதற்கு ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது.

தனது மூலோபாய திட்டங்களின் அங்கமாக, மனித மூலதனத்தில் இந்த முதலீடு என்பது நாட்டின் சுகாதார பராமரிப்பு பணியாளர்களை வலிமைப்படுத்துவதுடன், தொழிற்துறைக்கு நிலைபேறான எதிர்காலத்தை உறுதி செய்வதாக அமைந்திருக்கும்.

# வெள்ளி விருதை வென்ற HNB FINANCE



இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB Finance PLC ஆனது BestWeb.lk - 2024 விருது வழங்கும் நிகழ்வில் நிதி மற்றும் காப்புறுதி பிரிவின் கீழ் வெள்ளி விருதை வென்றது. "டீநளவறுநடி.டம" விருது வழங்கும் நிகழ்வு வருடம் தோறும் நாட்டிலுள்ள சிறந்த இணையத்தளங்களை மதிப்பிடுவதுடன், HNB Finance இன் www.hnbfinance.lk இணையத்தளமும் இம்முறை இவ்வாறு விருதிற்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

LK Domain Registry நிறுவனம் வருடாந்தம் ஏற்பாடு செய்யும் இந்த விருது வழங்கும் நிகழ்விற்கான விருதுகளுக்காக இலங்கையில் உள்ள பல முன்னணி நிறுவனங்கள் விண்ணப்பிப்பதுடன் இதற்கு முன்னரும் HNB Finance PLC இன் இணையதளம் மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த விருது வழங்கும் நிகழ்வில், விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்களின் இணையதளங்களை ஆக்கப்பூர்வமாக வழங்குதல், நிறுவனத்தின் சேவைகளை வாடிக்கையாளர்கள் எளிதில் அணுகும் திறன், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற காரணிகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

"எங்கள் இணையதளம் எப்போதும் வளர்ந்து வரும் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தளத்தின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், வாடிக்கையாளர்களுக்கு எங்கள் சேவைகளை வழங்குவதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் பாவனையாளர் நட்பு வடிவமைப்பின் எளிமை ஆகியவற்றின் அடிப்படையில் எப்போதும் முன்னணியில் உள்ளது.

இவை அனைத்தின் மூலமாகவும், வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் நம்பகமான தரமான சேவையை வழங்குவதே எங்கள் நோக்கம். நிதித்துறையில் முன்னணி நிறுவனமாக, சிறந்த வாடிக்கையாளர் சேவையை உரிய விடாமுயற்சியுடன் வழங்க உதவும் அனைத்து காரணிகளையும் கருத்தில் கொள்ளும் எங்களது முயற்சி இந்த விருது மூலம் உறுதி செய்யப்படுகிறது.

மேலும் இதுபோன்ற மதிப்பீடுகள் மூலம், நிதித்துறையில் தரம் சார்ந்த உயர் பதவிகளை அடைவதற்குத் தேவையான ஊக்கத்தைப் பெறுவோம் என்று நான் நம்புகிறேன்." என HNB FINANCEஇன் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் திரு உதார குணசிங்க தெரிவித்தார்.

இந்த விருது வழங்கும் நிகழ்வின் நடுவர் குழுவில் சிறந்த நிதி நிபுணர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் வணிகத் தலைவர்கள் அடங்கிய குழு இருந்ததுடன், விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் இணையதளங்கள் கடுமையான மதிப்பீட்டு செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டன.

அதன் தொழில்நுட்ப பின்னணி, தகவல் வழங்கல், வடிவமைப்பு நிலை மற்றும் வாடிக்கையாளர் பயன்பாட்டினை இங்கு பரிசீலிக்கப்பட்டது. தொழில்நுட்ப பின்னணியில், தொழில்நுட்பம், இணையதளத்தின் பல்வேறு அம்சங்களை எளிதாக அணுகுவது, தொழில்நுட்ப தரநிலைகள் மற்றும் செயல்திறன் ஆகியவற்றைக் பின்பற்றப்படுவது ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆக்கப்பூர்வமான மதிப்பீட்டில், இணையப் பக்கங்களின் முடிவு, பக்க அமைப்பு, நிலை மற்றும் தகவலின் அளவு போன்ற அம்சங்கள் மதிப்பீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# eMACH.ai ஐ அறிமுகப்படுத்தும் நிதித் தளம்




நிறுவன மட்டத்திலான நிதித் தொழில்நுட்ப தீர்வுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான Intellect Design Arena Ltd நிறுவனம், இலங்கையில் நஆயுஊஉ.யழ ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரத்தியேகமாக இலங்கையின் நிதித்துறைக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய தளமானது, கோட்பாடுகளின் சிந்தனை அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது, 329 நுண் சேவைகள், 535 நிகழ்வுகள், 1757 இற்கும் மேற்பட்ட யீஐ களை வழங்கும் முதலாவது கோட்பாடுகளின் சிந்தனையை அடிப்படையாகக் கொணட தளம் என்பதோடு, நிதி நிறுவனங்களுக்கு எதிர்காலத்திற்கு அவசியமான தீர்வுகளை உருவாக்கி, அவர்கள் உலகளாவிய போட்டித்தன்மை வாய்ந்தவர்களாக மாற உதவுகிறது.

நஆயுஊஉ.யழ ஆனது, வங்கி வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சுநவயடை, உஜே, ளுஆநு அல்லது ஊழசிழசயவந மற்றும் அவர்களது நிதிப் பயணத்தில் காணப்படும் நிகழ்வுகள், வங்கிச் செயற்பாடுள் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் இணக்கப்பட்டு அதிகாரசபைகளால் உருவாக்கப்பட்ட விடயங்களை பராமரிக்கின்றது.

# Lab Portal அறிமுகம்




நோயாளர்களுக்கான சிகிச்சையில் மற்றுமொரு முன்னோடி முயற்சியை மேற்கொண்டுள்ள ஹேமாஸ் மருத்துவமனை, நோயாளர்கள் தம்முடைய ஆய்வுகூட அறிக்கைகள் மற்றும் பெறுபேறுகளை பெற்று, நிர்வகிக்கின்ற வழிமுறையில் மாற்றத்தைக் கொண்டுவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு புரட்சிகரமான இணையத் தளமேடையான, தனது நிகழ்நிலை ஆய்வுகூட நுழைமுகத்தை (Lab Portal) அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த ஆய்வுகூட நுழைமுகமானது, நோயாளர்கள் தமது கடந்தகால ஆய்வுகூட சோதனை பெறுபேறுகள் மற்றும் சமீபத்தைய சோதனைப் பெறுபேறுகளை தமது ஸ்மார்ட்போன்களின் மூலமாக சௌகரியமாக பார்ப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதுடன், சுகாதாரப் பராமரிப்பு நிர்வாகத்தில் தங்குதடையின்றிய மற்றும் திறன்மிக்க அணுகுமுறைக்கும் வித்திட்டுள்ளது.

இலங்கையில் முதல்முறையாக இத்தகைய முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், டிஜிட்டலுக்கு இடமளித்தல் மற்றும் நோயாளரை மையப்படுத்திய கவனிப்பு ஆகியவற்றில் ஹேமாஸ் மருத்துவமனை கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

Hemas Labs இன் பணிப்பாளர் வைத்தியர் துஷியந்தன் சுப்பிரமணியம் அவர்கள் இப்புதிய சிறப்பம்சம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில், “எம்மிடம் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வருகின்ற நோயாளர்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் இந்த புத்தாக்கத்துடனான நுழைமுகமானது கணிசமானதொரு முன்னேற்றப்படியாக மாறியுள்ளதுடன், அவர்கள் தம்முடைய ஆய்வுகூட அறிக்கைகளை சௌகரியமாகப் பெற்றுக்கொள்வதற்கு இடமளித்து, அவர்களுடைய ஒட்டுமொத்த அனுபவத்தையும் மகத்தான அளவில் மேம்படுத்துகின்றது. என்று குறிப்பிட்டார்.

# P&S Golden Doily சமையற்கலைப் போட்டி

இலங்கையிலுள்ள மிகப் பாரிய விரைவு சேவை உணவகச் சங்கிலியான Perera & Sons Bakers (Private) Limited (P&S), மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட பணிப்பிரிவுகளுக்கு இடையிலான Golden Doily Culinary Art Competition என்ற சமையல்கலை போட்டியை நடாத்தியுள்ளது.

இராஜகிரிய டீசைனஎீயசம இல் இப்போட்டி இடம்பெற்றதுடன், நிறுவனத்தின் பல்வேறுபட்ட அணிகளும் தமது சமையற்கலை திறன்கள், படைப்பாற்றல் மற்றும் ஒன்றுபட்ட உழைப்பினை நட்புணர்வுடனான மற்றும் போட்டி அடிப்படையிலான சூழலில் வெளிக்காண்பிப்பதற்கு வலுவான மேடையை வழங்கியுள்ளது.

27 அணிகளைச் சேர்ந்த 208 போட்டியாளர்கள், 15 பிரிவுகளின் கீழ் போட்டியிட்டனர். P&S இன் பல்வேறு கிளைகள் மற்றும் பணிப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த அணிகள், தமது சமையல்கலை கைவண்ணத்தை படைப்பதற்கு மிகச் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டனர்.

சுவை மற்றும் நறுமணம், வெளித்தோற்றம், படைப்பாற்றல் மற்றும் மூலப்பண்பின் தனித்துவம், கருப்பொருள் அல்லது போட்டிப்பிரிவுக்கு




இணங்குதல், வெளிப்படைப்பு மற்றும் நுட்பம், சேர்க்கைப்பொருட்களின் பயன்பாடு மற்றும் ஒட்டுமொத்த வெளித்தோற்றம் அடங்கலாக, பல்வேறு முக்கிய அளவுகோல்களின் கீழ் நுழைவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

# சிறந்த பாங்கசூரன்ஸ் செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், அதன் பிரத்தியேக பாங்கசூரன்ஸ் பங்காளரான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி உடன் இணைந்து, வங்கியின் பாங்கசூரன்ஸ் அணி மற்றும் கிளை வலையமைப்பின் ஊழிய அங்கத்தவர்களின் சிறந்த செயற்பாடுகளை கௌரவிக்கும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வுகளில், யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி ஆகியவற்றின் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றதுடன், பிரதான வியாபார பங்காளர்களுடன் தனது உறவை வலிமைப்படுத்துவதற்கான யூனியன் அஷ்யூரன்ஸின் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இது அமைந்திருந்தது.

இந்த அபிவிருத்தி மற்றும் அணி கட்டியெழுப்பும் நிகழ்வுகளில் 200 க்கு அதிகமான சிறப்பாக செயலாற்றியிருந்த வங்கியின் ஊழியர்கள் பங்கேற்றிருந் தனர். Weligama Bay Marriott Resort & Spa மற்றும் Hikka Tranz by Cinnamon ஆகியவற்றில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளினூடாக, ஈடுபாட்டுடன் கூடிய அறிவூட்டும் அமர்வுகளில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

மேலும், குழுநிலை செயற்பாட்டை கட்டியெழுப்பும் தொடர்பாடல் பேணும் நிகழ்வுகளும் முன்னெடுப்பட்டதுடன், அதில் புகழ்பெற்ற பயிற்றுவிப்பாளரான பாதிய அர்த்தநாயக்கவின் கலந்துரையாடலும் அடங்கியிருந்தது.

# செலான் - ஏற்றுமதியாளர் சம்மேளனம் இணைவு



செலான் வங்கியானது தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் (NCE) தொடர்ந்து 3ஆவது ஆண்டாக தமது இணைவை புதுப்பித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் 2024, ஆகஸ்ட் 15ஆம் திகதி செலான் வங்கியின் தலைமை அலுவலகத்தில், இரு நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

அனைத்து தயாரிப்புகள் மற்றும் சேவைத் துறைகளின் முன்னணி ஏற்றுமதியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், NCE உடனான இந்த இணைவு, சம்மேளன உறுப்பினர்களுக்கு செலான் வங்கியின் நிதி வசதிகளை வழங்க உதவுகிறது.

இதன் விளைவாக, தங்கள் ஏற்றுமதியை அதிகரிக்க, சந்தைப் பங்கை விரிவுபடுத்த அல்லது அவற்றின் செயற்பாடுகளுக்கு மதிப்பு சேர்க்க முயல்கின்ற பெரிய அளவிலான வணிகங்கள் முதல் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் (SMEகள்) வரையிலான உள்ளூர் நிறுவனங்களுக்கு சர்வதேச சந்தைகளில் காலூன்றுவதற்கான சந்தர்ப்பம் கிட்டுகிறது.




# மெர்கன்டைல் கைப்பந்து சம்பியன்ஷிப்

இலங்கையின் முன்னணி நெசவுத் துணி உற்பத்தியாளரும், மெர்கன்டைல் கைப்பந்து சம்பியன்ஷிப் 2024 தொடரின் பெருமைமிக்க தங்க அனுசரணையாளருமான Ocean Lanka (Pvt) Ltd நிறுவனம், அண்மையில் மஹரகமவில் உள்ள இளைஞர் மையத்தின் உள்ளக விளையாட்டரங்களில் நடந்து முடிந்த கைப்பந்துப் போட்டியில் வெற்றியை பதிவு செய்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

நிறுவனத்தின் ஆடவர் கைப்பந்துக் குழுவானது, ஒப்பிட முடியாத திறமையையும், அசைக்க முடியாத உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியதோடு, மலிபன் நிறுவன குழுவை 3-1 எனும் செட் கணக்கில் தோற்கடித்து, சூப்பர் லீக் பட்டத்தை கைப்பற்றியது.

அணியின் முகாமையாளரும், Ocean Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் ஊழியர் தொடர்புகள் மற்றும் நிர்வாக முகாமையாளரும் அணி முகாமையாளருமான ருவன்சிறி மல்லிகாராச்சி இது பற்றித் தெரிவிக்கையில், "எமது கைப்பந்து அணியின் முக்கிய சாதனை தொடர்பில் நாம் மிகவும் பெருமை அடைகிறோம். இந்த வெற்றி அவர்களின் ஒப்பிட முடியாத திறமையை வெளிப்படுத்துகிறது.

இந்த சம்பியன்ஷிப் வெற்றியின் உச்ச கட்டத்தை அடைய, போட்டித் தொடர் முழுவதுமான அவர்களது அர்ப்பணிப்பு, குழு ரீதியான செயற்பாடு, திடமான மனப்பான்மை ஆகியன உதவின." என்றார்.

# போலி உதிரிப் பாகங்களுக்கு எதிராகப் போராட்டம்





தெற்காசியாவின் மிக சிரேஷ்ட வாகன சங்கமான சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் (CMTA) மற்றும் புலமைச் சொத்துரிமைகளில் நிபுணத்துவம் பெற்ற இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற சட்ட நிறுவனங்களில் ஒன்றான சுதத் பெரேரா அசோசியேட்ஸ் ஆகியன இணைந்து, நாட்டில் அதிகரித்து வரும் போலியான உதிரிப் பாகங்களின் சந்தை தொடர்பில், CMTA உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடொன்றை அண்மையில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் முன்னெடுத்திருந்தது.

இந்த நிகழ்வின்போது, CMTA உறுப்பினர்களுக்கு பெறுமதி வாய்ந்த தகவல்களையும், போலித் தயாரிப்புகளின் பரவலை எதிர்த்துப் போராடுவதற்கான சட்ட நடவடிக்கைகள் பற்றிய விரிவான விளக்கத்தையும் சுதத் பெரேரா அசோசியேட்ஸ் வழங்கியிருந்தது.

நுகர்வோரையும், பொருளாதாரத்தையும் பாதுகாக்க, இத்தொழில்துறையில் உள்ள பங்குதாரர்களுக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

போலியான உதிரிப் பாகங்கள் அடையாளம் காண்பதற்கு கடினமாகும். ஏனெனில் அவை அசல் பாகங்கள் போன்றதாக பிரதி செய்யப்பட்ட வணிக இலச்சினைகளுடனும் பொதியிடலுடனும் வருகின்றன.

வாகனங்கள், ட்ரக்குகள், மோட்டார் சைக்கிள்களுக்கான பிரேக் பேட்கள் போன்ற பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பாகங்களில் இது முக்கியத்துவம் வாய்ந்த சிக்கலாக அமைகின்றது. பெரும்பாலும், இந்த போலி உதிரிப் பாகங்கள் உரிய பாதுகாப்பு தரத்தை பூர்த்தி செய்வதில்லை, இதன் காரணமாக நுகர்வோர் மற்றும் வீதியில் பயணிக்கும் பயணிகளுக்கு ஆபத்தான நிலை உருவாகிறது.

# அமானா வங்கி தரம் உயர்வு





2024 ஆகஸ்ட் மாதம் முன்னெடுக்கப்பட்ட பிந்திய தரப்படுத்தல் மீளாய்வில், ஃபிட்ச் ஸ்ரீ லங்காவினால், அமானா வங்கியின் தேசிய நீண்ட கால கடன் தரப்படுத்தலை டீடூ(டமய) இலிருந்து உறுதியான தோற்றப்பாட்டுடன் டீடீ-(டமய) எனும் முதலீட்டு தரத்துக்கு உயர்த்தியுள்ளது.

ஃபிட்ச் ரேட்டிங்ஸ் வெளியிட்டிருந்த அறிக்கையின் பிரகாரம், இந்த தரப்படுத்தல் மெருகேற்றத்தினூடாக, அமானா வங்கியின் நிதிசார் கோவை சிறந்த முன்னேற்றங்களை பதிவு செய்துள்ளதுடன், அதன் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த தரப்படுத்தலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமானா வங்கியின் தொழிற்படு இலாபம்ஃஇடர் சேர்க்கப்பட்ட சொத்துகள் விகிதம் (நான்கு ஆண்டு சராசரி 2மூ, 1உ24: 2.9மூ) முன்னேற்றம் கண்டிருந்ததுடன், தொழிற்படு சூழல் சவால்கள் நிறைந்ததாக அமைந்திருந்ததுடன், ஆரோக்கியமான நிகர நிதியளிப்பு எல்லைகள், அந்நியச் செலாவணி வியாபாரம் (நான்காண்டு சராசரி தொழிற்படு இலாபத்தின் 38மூ ஆக அமைந்திருந்தது) அளவான வர்த்தக வருமதியை பதிவு செய்திருந்ததுடன், குறைந்தளவு கடன் செலவுகளையும் கொண்டிருந்தது. இந்த முன்னேற்றகரமான இலாபகரத்தன்மை நடுத்தர கால அளவில் பதிவாகியிருக்கும் என்பதுடன், வங்கியின் முற்பண புத்தகங்கள் அதிகளவு விளைவுகளை வழங்கும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகள் மற்றும் சில்லறை பிரிவுகளில் திருப்பத்தை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.